# பெருந்தோட்டம் மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சு

# எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனம்

# வெற்றிடங்கள்

எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனத்தில் உள்ள பின்வரும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகுதி வாய்ந்த இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி — தோட்ட அத்தியட்சகர் — 01 (ஒப்பந்த அடிப்படை)**

## ESTATE SUPERINTENDENT

**தகைமைகள் : வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் பல்கலைக்கழகமொன்றில் விவசாயத்தில் இளமாணிப் பட்டம்

அத்துடன்

பெருந்தோட்டத் துறையில் தேயிலை, இறப்பர், தெங்கு மற்றும் ஏனைய கலப்புப் பயிர்ச்செய்கையில் தகைமைக்குப் பின்னரான 03 வருடகால அனுபவம். பெருந்தோட்ட முகாமைத்துவத்தில் டிப்ளோமா சான்றிதழ், விவசாயம் மற்றும் தகவல் தொழில்நுட்பத்தில் சிறந்த அறிவு என்பவை தகுதிகளாக சேர்க்கப்படும்.

உள்வாரி விண்ணப்பதாரிகள்

எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனத்தில் கனிஷ்ட முகாமைத்துவ வகுதியில் உதவி தோட்ட அத்தியட்சகர் பதவியில் குறைந்தபட்சம் 5 வருடகால திருப்திகரமான சேவை

**சம்பள அளவு :** 131,260.00 (அனைத்தும் உள்ளடங்கலாக)

**வயது :** 25 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**பதவி — உதவி அத்தியட்சகர்கள் — (02) (ஒப்பந்த அடிப்படை)**

## ASSISTANT SUPERINTENDENTS

**தகைமைகள் - வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் பல்கலைக்கழகமொன்றில் விவசாயத்தில் இளமாணிப் பட்டம்

   அத்துடன்

2. தேயிலை, இறப்பர், தெங்கு மற்றும் ஏனைய கலப்புப் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையில் 01 வருடகால மேற்பார்வை அனுபவம்.

உள்வாரி விண்ணப்பதாரிகள்

தேயிலை, இறப்பர், தெங்கு மற்றும் ஏனைய கலப்புப் பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை துறையில் 1ஆம் தர முகாமைத்துவ உதவியாளர் வகுதி பதவியில் குறைந்தபட்சம் 05 வருடகால அனுபவம்

**சம்பள அளவு :** 87,183.00

**ஆட்சேர்க்கும் நடைமுறை -** நியமன அதிகாரியினால் நியமிக்கப்படும் நேர்முகத்தேர்வுக் குழுவினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகத்தேர்வின் பெறுபேறுகளின் பிரகாரம் மேற்கொள்ளப்படும்.

- கட்டமைக்கப்பட்ட நேர்முகத் தேர்வு
- தொடர்புடைய மேலதிக அனுபவம் - 30 புள்ளிகள்
- தொடர்புடைய மேலதிக தகைமைகள் - 30 புள்ளிகள்
- ஏனைய சாதனைகள் - 15 புள்ளிகள்
- நேர்முகத்தேர்வில் காட்டும் செயற்திறன் - 25 புள்ளிகள்
- மொத்தம் - 100 புள்ளிகள்

**ஏனையவை** - இந்தப் பதவிகளுக்காக மேற்கொள்ளப்படும் சகல நியமனங்களும் குறித்த ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் பிரகாரம் திடமான இணக்கமாகும்.

- சகல விண்ணப்பதாரர்களும் இலங்கைப் பிரஜைகளாகவிருத்தல் வேண்டும்.

- சிறந்த நன்னடத்தையுடையவராக இருக்க வேண்டும்.

விண்ணப்பப் படிவங்கள் - விண்ணப்பதாரரினால் சகல விபரங்கள் மற்றும் பிறப்பத்தாட்சிப் பத்திரம், மற்றும் அனுபவம் தொடர்பான சான்றிதழ்களின் பிரதிகள் சகிதம் தயாரித்துக் கொண்ட விண்ணப்பப் படிவங்களை பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். குறித்த விண்ணப்பப் படிவங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் நேரம் முடிவடைந்த பின் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் - 2026 ஜனவரி மாதம் 31ஆம் திகதிக்கு முன் பின்வரும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

**தலைவர்,**
**எல்கடுவ பெருந்தோட்ட நிறுவனம்,**
**ரத்வத்த, உக்குவளை.**
**2026-01-14**